பாடம் 6

# இடைக்காலம்



## கற்றல் நோக்கங்கள்

- தாங், சுங், யுவான் ஆகிய அரச வம்ச ஆட்சிக் காலங்களில் சீனப்பேரரசு நிலை பற்றி அறிதல்
- ஃபுஜிவாரா குடும்பம் மற்றும் கம்பகாரா சோகுனேட்டின் கீழ் ஜப்பானிய சமூகத்தின் எழுச்சியைப் புரிந்து கொள்ளல்
- இஸ்லாம் தோன்றியதன் பின்னணியைக் கண்டறிதல்
- அராபிய மற்றும் உதுமானியப் பேரரசுகள் குறித்தும், இஸ்லாம் பரவுவதற்கு அவர்களின் பங்களிப்பு பற்றியும் அறிதல்
- இடைக்காலத்தில் நிலப்பிரபுத்துவத்தின் தன்மைகளை ஆராய்தல்
- இடைக்காலத்தில் அரசுக்கும் திருச்சபைக்கும் இடையேயான உறவைப் புரிந்து கொள்ளுதல்

B2XZHE

## அறிமுகம்

ரோமானியப் பேரரசு கி.பி. (பொ.ஆ) –476 இல் வீழ்ச்சியடைந்தது. கி.பி. (பொ.ஆ)–1453இல் கான்ஸ்டாண்டிநோபிள் நகரைத் துருக்கியர் கைப்பற்றினர். இவ்விரு முக்கிய நிகழ்வுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை வரலாற்று அறிஞர்கள் இடைக்காலம் என அழைக்கின்றனர். இந்த இடைக்காலமானது தொடக்க இடைக்காலம், மைய அல்லது உயர் இடைக்காலம், பின் இடைக்காலம் என மேலும் பகுக்கப்பட்டுள்ளது. தொடக்க இடைக்காலத்தில் (ஏறத்தாழ ஐந்து முதல் பத்தாம் நூற்றாண்டு) கிறித்தவமும் அதைத் தொடர்ந்து இஸ்லாமும் ஐரோப்பியக் கண்டத்தில் தங்களை வலுவான மதங்களாக நிலை நிறுத்தத் தொடங்கின. மைய அல்லது உயர் இடைக்காலத்தில் பிரதேச விரிவாக்கம், மக்கள் தொகைப் பெருக்கம், நகரங்களின் வளர்ச்சி, சமயம்சாரா மற்றும் சமயம்சார்ந்த நிறுவனங்களின் மறுசீரமைப்பு போன்ற நிகழ்வுகள் அரங்கேறின.

பைசாண்டியப் பேரரசின் வரலாற்றுக்கு சிறிது காலம் கழித்துத் தொடங்கும் அராபிய நாகரிகத்தின் காலம் ஏறத்தாழ கி.பி. (பொ.ஆ) 630 முதல் 1300 வரையாகும். சாரசனிக் நாகரிகம் என்றறியப்பட்ட இந்நாகரிகம் ஒரு புதிய மதத்தை மையமாகக் கொண்டு உருவானதாகும். கிறித்தவ ஐரோப்பாவில் அது ஏற்படுத்திய தாக்கம் புரட்சிகரமான சமூக மற்றும் அறிவுலக மாற்றங்களுக்குக் காரணமாயிற்று.

**செல்ஜுக் துருக்கியர்கள்** மத்திய ஆசியாவைச் சேர்ந்த தார்த்தாரியர் என்னும்



IX_Std_History_TM_Unit _6.indd 82 2/10/2020 10:02:39 AM

நாடோடியினர் ஆவர். அவர்கள் பாரசீகத்தில் ஒரு வலுவான பேரரசை நிறுவினர். இவர்களின் ஆட்சிக்காலத்தில் இலக்கியம், கலை, கட்டடக்கலை ஆகிய துறைகளில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்பட்டது. இதைப் போலவே அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு அனடோலியாவிற்குச் (ஆசியாமைனர்) சென்று சுதந்திரமான பேரரசை நிறுவிய உதுமானிய துருக்கியர் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதாகும்.

### இடைக்காலங்களில் கிழக்கு ஆசியா

## 6.1 சீனா: தாங் (Tang) அரச வம்சம் (கி.பி. (பொ.ஆ) 618–907)

சீனாவில் ஆட்சிப் பொறுப்பேற்ற சூயி அரசவம்சம் நாற்பதாண்டுகளில் வீழ்ச்சியைச் சந்தித்தது. மிகப்பெரும் வாய்க்கால் (Grand Canal) அமைத்தல் போன்ற பொதுப்பணிகளால் ஏற்பட்ட பெரும் நிதிச்சுமையும், கொரியாவின் வடக்குப் பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு மிகுந்த போர்களும் சூயி வம்சத்தின் வீழ்ச்சிக்குக் காரணங்களாயின. ஒரு வலுவான மையப்படுத்தப்பட்ட பேரரசை உருவாக்கும் நோக்கில் நடத்தப்பட்ட கிளர்ச்சிகளுக்கிடையிலிருந்து தாங் வம்சம் உதயமானது. இக்கிளர்ச்சியை திட்டமிட்டு நடத்திய லி யுவான், யங் யு என்பவரை சீனாவின் பேரரசர் பதவியில் அமர வைத்தார். ஆனால் யங் யு தன்னுடையஅதிகாரிஒருவரால்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அரசுத் தலைமை அதிகாரியாக இருந்த (Chancellor) லி யுவான் தன்னைத்தானே பேரரசராக அறிவித்தார். வடமேற்கு எல்லையில் பலநூறு கிலோமீட்டர் தொலைவுக்குப் பெருஞ்சுவர் மீண்டும் கட்டப்பட்டது.இராணுவ நடவடிக்கைகள் சீனாவின் செல்வாக்கைக் கிழக்கே கொரியாவிலும் மேற்கே பாரசீகம் மற்றும் இந்தோ–சீனாவின் எல்லை வரையிலும் பரப்பின.

தாங் அரச வம்சம் மிகப்பெரிய அளவிலான பொதுப்பணிகளை மேற்கொண்டது. போயாங், சாங்–ஆன் என்னும் இரு தலைநகரங்கள் உருவாக்கப்பட்டன. பெரும் நிலவுடைமையாளர் வர்க்கத்தின் செல்வாக்கை சமன் செய்யும் நோக்கில் கன்பூசியத் தத்துவத்தில் பயிற்சி பெற்ற அறிஞர்களும் அதிகாரிகளும் பணியமர்த்தப்பட்டனர். நிலம் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதன் விளைவாக வேளாண் உபரி, நிலப்பிரபுக்களுக்கு குத்தகையாகச் செல்வதற்கு மாறாக வரியாக அரசை வந்தடைந்தது. மேலும் உப்பு மற்றும் தேயிலை அரசின் முற்றுரிமையின் கீழிருந்ததால் அவை அரசுக்குக் கூடுதல் வருவாயை நல்கின.

### சீனப் பெருஞ்சுவர்

கி.மு. (பொ.ஆ.மு) 8 மற்றும் 7 ஆம் நூற்றாண்டுகளின் இடைப்பட்ட காலப் பகுதியில் தங்களுக்குள்ளே போரிட்டுக் கொண்டிருந்த சீன அரசுகள், வடக்கேயிருந்து வரும் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சுவர்களை எழுப்பிக் கொண்டன. சின் அரசவம்சத்தின் காலத்தில் தனித்தனியாக இருந்த பல சுவர்கள் இணைக்கப்பட்டன. இதன் விளைவாக கிழக்கிலிருந்து மேற்காக சுமார் 5000 கிலோ மீட்டர் நீளமுடைய பெருஞ்சுவர் உருவானது. இச்சுவர் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நாடோடிப் பழங்குடியினர் உள்ளே நுழைய முடியாதவாறு இச்சுவர் தடுத்தது. பின்னர் ஆட்சிபுரிந்த பல அரச வம்சத்தினர் காலத்தில் இச்சுவர் விரிவு செய்யப்பட்டு வலுவூட்டப்பட்டது. தற்போது சீனப்பெருஞ்சுவரின் மொத்த நீளம் 6700 கிலோ மீட்டர் ஆகும்.



### சுங் அரச வம்சம் (Sung Dynasty) (கி.பி. (பொ.ஆ) 960–1279)

பெருந்துயரங்களுக்கு உள்ளான விவசாயிகள் ஹங்சோவ்வின் தலைமையில் மேற்கொண்ட கலகமானது, ஏற்கனவே ஆட்டம் கண்டிருந்த தாங் பேரரசுக்கு பேரழிவைக் கொடுத்தது. இப்பேரரசு ஐந்து பகையரசுகளாகப் பிரிந்தது. பின்னர் புதிதாக ஆட்சியில் அமர்ந்த சுங் வம்ச அரசர்களின் ஆட்சிக் காலத்தில் அவைகள் இணைந்தன. சுங் வம்ச காலத்தில் வணிகமும் தொழில்களும் செழித்து வளர்ந்தன. இரும்பு மற்றும் எஃகு ஆலைகள் மிகவும் கட்டுக்கோப்பாக நடத்தப்பட்டன.

### சுங் அரசவம்சத்தின் வீழ்ச்சி

சுங் அரசவம்சத்தின் ஆட்சியின்போது நிலஉடைமையாளர்களும் அரசு அதிகாரிகளும் பணம் படைத்த வணிகர்களும் மிக வளமான வாழ்க்கையை வாழ்ந்தனர். நேர்மாறாக சாதாரண விவசாயிகள் வறுமையில் அகப்பட்டு வாடினர்.



IX_Std_History_TM_Unit _6.indd 83 2/10/2020 10:02:39 AM

உள்நாட்டில் பிரச்சனைகள் தலைதூக்குவதற்கு முன்னதாகவே வடக்கே இருந்து மேற்கொள்ளப்பட்ட இரு வெளிநாட்டவர் படையெடுப்புகள் சுங் வம்சத்தவர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தன. தொடர்ந்து மங்கோலியர்கள் யுவான் வம்சத்தினர் என்ற பெயரில் தங்கள் ஆட்சியை நிறுவினர்.



கி.பி (பொ.ஆ.) 1078இல் சீனா உற்பத்தி செய்த இரும்பு 114,000 டன்னைத் தாண்டியது (1788இல் இங்கிலாந்து 68,000 டன்னே உற்பத்தி செய்தது), சீனா, செராமிக் (Ceramics) ஓடுகள் மற்றும் பீங்கான் பொருட்கள் செய்வதிலும் தனித்திறன் பெற்று விளங்கியது. இத்தொழில் நுட்பத்தை அடுத்து வந்த 700 ஆண்டுகள் வரை ஐரோப்பா அறிந்திருக்கவில்லை வெடிமருந்து 1044லேயே பயன்பாட்டில் இருந்தது. ஐரோப்பாவைக் காட்டிலும் 500 ஆண்டுகளுக்கு முன்பாகவே சீனா அச்சடிக்கப்பட்ட புத்தகங்களைக் கொண்டிருந்தது. (Chris Harman, A Peoples' History of the World, p.111)

**யுவான் அரச வம்சம்** (Yuan Dynasty)
**(கி.பி. (பொ.ஆ) 1279–1368)**

பாரசீகத்தையும் ஒட்டு மொத்த மத்திய ஆசியாவையும் கைப்பற்றிய மங்கோலியர்கள் சீனாவையும் விட்டுவைக்கவில்லை. கி.பி. (பொ.ஆ.) 1252–இல் மாபெரும் 'கான்' ஆக மாறிய மங்குகான் குப்ளாய்கானை சீனாவின் ஆளுநராகப் பணியமர்த்தினார். யூரேசியாவின் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை பரவியிருந்த மங்கோலியரின் ஆதிக்கம், சீனாவின் தொழில் நுட்ப முன்னேற்றங்களை இதர வளர்ச்சி குன்றிய மேற்கு சமூகங்களிடையே பரப்புவதற்கு உதவியது. பெய்ஜிங்கிலிருந்த மங்கோலியரின் அரச சபை மார்க்கோ போலோ போன்ற வெளிநாட்டவர்களிடம் நன்மதிப்பை ஏற்படுத்தி இருந்தாலும் விவசாயிகள் தொடர்ந்து வறுமையில் வாடினர். சில மதம் சார்ந்த அமைப்புகளும் ரகசிய அமைப்புகளும் புரட்சியில் இறங்கின. முடிவில் **'சிகப்பு தலைப்பாகைகள்'** (Red Turbans) என்ற அமைப்பின் தலைவரான சூ யுவான் சங் தலைநகர் பெய்ஜிங்கைக் கைப்பற்றி கி.பி. (பொ.ஆ.) 1369 இல் தன்னை பேரரசராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.



குப்ளாய் கான்



மங்கோலியரின் அரச சபை

**மிங் பேரரசு** (Ming Dynasty)
**கி.பி. (பொ.ஆ) 1368–1644)**

மங்கோலியர்களை அகற்றிவிட்டு ஆட்சியமைத்த மிங் வம்ச அரசர்கள் வேளாண்மையில் முழுமையாகக் கவனம் செலுத்தும் பொருட்டு, தொழில் மற்றும் வணிக வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தருவதற்குத் தவறினர். இதன் விளைவாக 16ஆம் நூற்றாண்டில் சீனா பின்தங்க நேர்ந்தது. யூரேசியாவின் ஏனைய பகுதிகள் சீனாவின் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி முன்னேறத் தொடங்கின.

## 6.2 ஜப்பான்

ஜப்பானியரின் மூதாதையர் பலர், கொரியாவிலிருந்தும் சிலர் மலேசியாவிலிருந்தும் வந்தவர்களாவர். கொரியாவின் மூலமாக சீன நாகரிகம் யமட்டோவில் பரவியது (ஜப்பானின் முன்னாள் பெயர் 'யமட்டோ' ஆகும்). இந்நாட்டின் பூர்வ குடிகள் 'அய்னஸ்' (அபாரிஜின்கள்) என அழைக்கப்படுகின்றனர். ஜப்பானியர்களின் பூர்வீக மதம் 'ஷின்டோ' ஆகும். ஷின்டோ என்பது இயற்கை மற்றும் மூதாதையர் வழிபாடு ஆகிய இரண்டும் கலந்ததாகும்.



ஷின்டோ மதம்

பல நூற்றாண்டுகளாக ஜப்பான் தனிமைப்பட்டே இருந்தது. இதனால் அயலவர் படையெடுப்புகளுக்கு ஆளாகாமல் சுதந்திரத்தின் பயனை அனுபவித்து வந்தது. பௌத்த மதம் கொரியாவின் மூலம் ஜப்பானில் அறிமுகமாகியது. 'சோடுகு–தாய்சி' இறந்தபின்னர் அவருடையகுடும்பம்



IX_Std_History_TM_Unit _6.indd 84 2/10/2020 10:02:42 AM


ஃபுஜிவாரா குடும்பத்தை உருவாக்கிய நகடோம்–நோ–காமதாரி என்பவரால் விரட்டப்பட்டது. அவர் பல சீன வழிமுறைகளைப் பின்பற்றி மைய அரசை மேலும் வலிமையானதாக மாற்றினார். நாரா என்னும் நகரை தலைநகரமாக்கினார். கி.பி (பொ.ஆ) 794 முதல் தொடர்ந்து வந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு கியாட்டோ ஜப்பானின் தலைநகரமாகச் செயல்பட்டது. பின்னர் டோக்கியோ தலைநகரானது. ஃபுஜிவாரா குடும்பத்தைச் சேர்ந்த அரசர்கள் தங்கள் இறுதிக் காலங்களில் மடங்களுக்குச் சென்று துறவு வாழ்க்கை மேற்கொண்டனர். இருந்தபோதிலும் தங்கள் அதிகாரத்தைத் தொடர்ந்து செயல்படுத்தினர்.

ஃபுஜிவாரா குடும்பத்தினரின் இருநூறு ஆண்டுகால ஆட்சியின்போது பெருவாரியான நிலங்களை சொந்தமாகக் கொண்ட புதிய வர்க்கம் உருவானது. இவர்கள் போர் வீரர்களுமாவர். இவர்கள் டய்ம்யாஸ் (பெரும்பெயர் அல்லது பிரபு) என அழைக்கப்பட்டனர். நாளடைவில் டய்ம்யாஸ்கள் தங்கள்இராணுவ பலத்தால் அதிகாரமிக்கவர்களாக மாறினர். இறுதியில் தாரா, மினமோட்டா எனும் குடும்பங்களுக்கிடையே நடைபெற்ற போரில் யோரிடோமோ என்பவர் வெற்றி பெற்றார். கி.பி. (பொ.ஆ)1192இல் பேரரசர் இவருக்கு செ–ய்–தாய்–சோகன் (பண்பாடற்றவர்களை அடக்கிய மாபெரும் தளபதி) என்னும் பட்டத்தைச் சூட்டினார். இப்பட்டம் பரம்பரை பரம்பரையாக ஆட்சி நடத்தும் உரிமையை உட்பொருளாகக் கொண்டிருந்தது. காலப்போக்கில் சோகன் உண்மையான ஆட்சியாளரானார். இவ்வாறான வழியில் சோகுனேட்டுகளின் ஆட்சி உருவானது.

யோரிடோமோ தனது இராணுவத் தலைமையகத்தை காமகுராவில் நிறுவினர். இதனால் முதல் சோகுனேட் காமகுரா சோகுனேட் என அழைக்கப்பட்டது. வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஜப்பான் தனக்கேயுரிய வழிகளில் சீனத்தைப் பின்பற்றியது. பேரரசர் ஓர் அலங்காரத் தலைமையாக மட்டுமே இருந்தார். நிலப்பிரபுத்துவஇராணுவத்தன்மை கொண்ட அரசு சாமுராய் எனப்பட்ட இராணுவ வீரர்களால் நிர்வகிக்கப்பட்டது. ஆசிய வரலாற்றின் போக்கை மாற்றியமைத்த மற்றும் ஐரோப்பாவை பயமுறுத்திய மங்கோலியரை சோகுனேட்டுகளின் தலைமையில் ஜப்பான் வெற்றி கொண்டது. இருந்தபோதிலும் இவ்வம்சத்தின் சரிவு தொடங்கியது. கி.பி. (பொ.ஆ) –1338இல் காமகுரா சோகுனேட் வீழ்ச்சியடைந்தது. சோகுனேட்டுகளில் வேறொரு பிரிவைச் சேர்ந்த 'அஷிக்காகா' சோகுனேட்டுகள் ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்களின் ஆட்சி 235 ஆண்டுகள் நீடித்தது. இக்காலகட்டம் அரசியல் குழப்பங்களும் அதிகாரப் போட்டிகளும் நிறைந்ததாய் இருந்தது. இறுதியில் மூவர் ஜப்பானை நீண்ட காலம் நடைபெற்ற உள்நாட்டுப் போர்களிலிருந்து மீட்டனர். அவர்கள் போர்புநகா என்ற பிரபு, டய்ம்யாஸ் அல்லது ஹிடயோஷி எனப்பட்ட விவசாயி, தொகுகவா இய்யாசு என்ற அக்காலத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற பிரபுஆகியோராவர். 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஜப்பான் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டது.

## 6.3 இஸ்லாமும், இஸ்லாமியப் பேரரசுகளின் தோற்றமும்

நபிகள் நாயகம் (முகமது நபி) இஸ்லாமைத் தோற்றுவித்தார். இஸ்லாம் சகோதரத்துவம் என்னும் கருத்தை முன் வைத்தது. இஸ்லாமியர் அனைவரும் சரிசமமானவர்கள் எனும் கருத்தினை முகமது அழுத்தமாகக் கூறினார். சமத்துவம் சகோதரத்துவம் ஆகிய இக்கருத்துக்கள் தங்களுக்குள்ளே போர் செய்து கொண்டிருந்த அராபிய இனக் குழுக்களுக்கும், உலகின் ஏனைய பகுதிவாழ் மக்களுக்கும் ஏற்புடையதாய் இருந்தது. ஆனால் பிறந்த ஊரில் சந்தித்த இடர்ப்பாடுகளின் காரணமாய் நபிகளும் அவரைப் பின்பற்றுவோரும் மெக்காவிலிருந்த எத்ரிப் என்னும் நகருக்கு இடம் பெயர்ந்தனர். கி.பி. (பொ.ஆ) –622இல் மெக்காவை விட்டு நபிகள் இடம்பெயர்ந்த நிகழ்வு அராபிய மொழியில் '**ஹிஜிரா**' (Hijrah) என அழைக்கப்படுகிறது. அவருடைய வருகையைச் சிறப்பிக்கும் வகையில் எத்ரிப் நகர மக்கள் தங்கள் நகரத்திற்கு மதினாட்–உன்–நபி (நபிகள் நாயகத்தின் நகரம்) எனப் புதுப்பெயர் சூட்டினர். தற்போது அது மெதினா என அழைக்கப்படுகிறது. ஹிஜிராவிற்குப் பின்னர் பத்து ஆண்டுகள் கழித்து கி.பி. (பொ.ஆ) –632 இல் நபிகள் இயற்கை எய்தினார். அவர் இயற்கை எய்தும் தருவாயில் இஸ்லாமின் கருத்துக்களால் ஒருங்கிணைக்கப்பட்டு அராபியர்கள் ஒரு வலிமை வாய்ந்த சக்தியாக உருவாயினர்.



மெக்கா

### 6.3 (அ) அராபியர்

நபிகள் நாயகத்தைத் தொடர்ந்து **கலீஃபா** (மத மற்றும் அரசியல் தலைவர்) பதவியேற்ற அபுபக்கர், ஒமர் ஆகிய இருவரும் ஓர் இஸ்லாமியப்



IX_Std_History_TM_Unit _6.indd 85 2/10/2020 10:02:42 AM

பேரரசின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டனர். குறுகிய காலத்தில் அராபியர்கள் கீழை ரோமானியப் பேரரசையும், பாரசீக சசானிட் அரசரையும் தோற்கடித்தனர். யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் புனித நகரமாக விளங்கிய ஜெருசலேம் அராபியர்களால் கைப்பற்றப்பட்டது. ஒட்டுமொத்த ஸ்பானியமும் பாரசீகமும் புதிய அராபியப் பேரரசின் கீழ்வந்தன.

இஸ்லாம் எளிமையையும் சமத்துவத்தையும் ஆதரித்தது. முந்தைய முறைமைகளின் கீழ் அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் ஆளாகியிருந்த பெருவாரியான மக்களிடையே இவ்விரு கருத்துக்களும் ஈர்ப்பை ஏற்படுத்தி வரவேற்பைப் பெற்றன. அராபியர்கள் மிக எளிதாகப் பல பகுதிகளைக் கைப்பற்றினர். ரோமானியப் பேரரசின் கீழ்பெரும் துயரங்களை அனுபவித்த எகிப்திய மக்கள் எளிதாக அராபியரின் மேலாதிக்கத்தை ஏற்றனர். தளபதி 'தாரிக்' என்பாரின் தலைமையின்கீழ் மொராக்கோவையும் ஆப்பிரிக்காவையும் கைப்பற்றிய அராபியர்கள் ஐரோப்பாவுக்குள் நுழைந்து ஸ்பானியத்தைக் கைப்பற்றி அதனை பல நூற்றாண்டுகள் ஆண்டனர். அதுவரையிலும் பாலைவனங்களில் நாடோடிகளாக வாழ்ந்துவந்த அராபியர்கள் வலிமை மிகுந்த ஒரு பேரரசின் ஆட்சியாளர்கள் ஆயினர். இவர்கள் சாராசென்ஸ் (சகாரா மற்றும் நஸின் என்னும் இரு சொற்களின் இணைப்பு பாலைவனத்தில் வாழ்பவர்கள் என்பது பொருள்) என்றும் அழைக்கப்பட்டனர்.

### சன்னி, ஷியா பிரிவுகளின் தோற்றம்

அராபியத் தலைவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளே இஸ்லாமின் இருபிரிவுகள் தோன்றக் காரணமாயிற்று. அப்பிரிவுகள் சன்னி மற்றும் ஷியா என்றழைக்கப்பட்டன. சன்னி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமியர்கள், இஸ்லாமிய நாடுகளின் தலைமையும், நபிகளுக்குப்பின் அப்பொறுப்புக்கு வருவோரும் இஸ்லாமியத்தில் நம்பிக்கையுடைய மக்களின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். மாறாக ஷியா பிரிவைச் சேர்ந்தோர் இவ்வரசியல், மத தலைமைப் பொறுப்புகளை ஏற்போர் நபிகள் நாயகத்துடன் ரத்த உறவு கொண்டவர்களாகவும் அல்லது மண உறவு கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். மற்றவர்களை அனுமதிக்க முடியாது என்ற நிலைபாட்டைக் கொண்டிருந்தனர்.

### ஒமையது அல்லது உமையது வம்சத்தின் ஆட்சி

நபிகள் நாயகத்தின் குடும்பத்தின் ஒரு உறவு வழியைச் சேர்ந்த கலீஃபாக்கள் ஒமையது அல்லது உமையது என்று அழைக்கப்பட்டவர்கள் 100 ஆண்டுகாலம் ஆட்சி புரிந்தனர். டமாஸ்கஸ் அவர்களின்தலைநகரமாகும்.ஒருபுதியபாணியிலான கட்டடக்கலையை அவர்கள் வளர்த்தனர். அதற்கு சாரசனிக் கட்டடக் கலை என்று பெயர். இப்பாணியில் அமைந்த வளைவுகள், தூண்கள், கவிகை மாடங்கள் (Domes) மினார் எனப்படும் கோபுரங்கள் ஆகியவை இந்தியாவில் பரவி இந்தியக் கட்டடக்கலை பாணிகளோடு கலந்தன.



சாரசனிக் கட்டடக் கலை

அராபிய முஸ்லீம்கள் இஸ்லாத்தை உலகின் பல பகுதிகளுக்கு எடுத்துச் சென்றனர். தொலைதூரப் பகுதிகளில் அவர்கள் போர் செய்து கொண்டிருந்தபோது அராபியாவில் இருந்தவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். நபிகள் நாயகத்தின் மருமகன் அலியும் அவரது மகன் ஹுசைனும் கொல்லப்பட்டனர். உமையதுகள் பதவி நீக்கம் செய்யப்பட்டு அப்பாசிட்டுகள் ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் நபிகள் நாயகத்தின் மாமன் அப்பாஸ் (Abbas) என்பவரின் வழிவந்தோர் ஆகையால் அப்பாசித்துகள் என்றழைக்கப்பட்டனர்.

### அப்பாசித்துகளின் ஆட்சி

அப்பாசித்துகளின் ஆட்சி கி.பி. (பொ.ஆ) –750இல் தொடங்கியது. "நம்பிக்கையாளர்களின் தளபதி" என்னும் பட்டத்தோடு பதவியேற்ற அப்பாசித் ஆட்சியாளர்கள் ஏனைய பேரரசுகளைப் போலவே ஆட்சி புரிந்தனர். பகட்டான விசயங்களில் ஏனைய அரசுகளோடு போட்டியிட்டனர். தலைநகர் டமாஸ்கஸ்ஸிலிருந்து ஈராக்கிலுள்ள பாக்தாத்திற்கு மாற்றப்பட்டது.



பாக்தாத் நகரம்

### அராபியரின் அறிவுசார் முயற்சிகள்

அப்பாசித்து கலீஃபாக்கள் புதிய நிலங்களைக் கைப்பற்றும் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. அறிவுசார்ந்த முயற்சிகளில் அவர்கள் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர்.



IX_Std_History_TM_Unit _6.indd 86 2/10/2020 10:02:43 AM

பாக்தாத்: "அரேபிய இரவுகளின் நகரம்" என அறியப்பட்ட நகரமாகும். இது அரண்மனைகள், பொதுக்கட்டடங்கள்,பள்ளிகள்,கல்லூரிகள்,பெரிய கடைகள், பூங்காக்கள் மற்றும் தோட்டங்களைக் கொண்ட விரிந்து பரந்த நகரமாகும். வணிகர்கள் கிழக்கோடும் மேற்கோடும் பெரும் வணிகத்தைச் செய்தனர். உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பார்வையாளர்கள் குறிப்பாக படித்த அறிஞர்கள், மாணவர்கள், கலைஞர்கள் பாக்தாத்திற்கு வந்தார்கள்". – நேரு, உலக சரித்திரம் (Glimpses of World History).

அராபியர்கள் அறிவியல் பூர்வமான கேள்வி ஞானம் உடையவர்களாக இருந்தனர். மருத்துவம், கணிதம் போன்ற துறைகள் தொடர்பான பலவற்றை அவர்கள் இந்தியாவிலிருந்து கற்றுக் கொண்டனர். இந்திய அறிஞர்களும் கணிதவியலாளர்களும் அதிக எண்ணிக்கையில் பாக்தாத் சென்றனர். மருத்துவம் மற்றும் பிறதுறைகள் சார்ந்த சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட பல இந்திய நூல்கள் அராபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. அராபிய மருத்துவர்களும் அறுவை சிகிச்சை நிபுணர்களும், மருத்துவ, அறுவை சிகிச்சை துறையில் புகழ்பெற்று விளங்கினர்.

### 6.3 (ஆ) அராபியப் பேரரசின் சிதைவும் செல்ஜு துருக்கியர்களின் எழுச்சியும்

அப்பாசித்து பேரரசு ஹருன்–அல்–ரசீத் அரசரின் ஆட்சிக் காலத்தில் புகழின் உச்சத்தில் இருந்தது. அவருடைய இறப்பிற்குப் பின் பேரரசு சிதையத் தொடங்கியது. ஆங்காங்கே பல சுதந்திர சிற்றரசுகள் தோன்றின. கலீஃபா ஆட்சி வலுவிழந்ததால் அவ்வரசுகளைக் கட்டுப்படுத்த இயலவில்லை. இஸ்லாமியர்களாக மாறிய துருக்கியர்கள் (செல்ஜுக் துருக்கியர் என அழைக்கப்பட்டனர்) பாக்தாத்தைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார்கள். கான்ஸ்டாண்டிநோபிளின் பைசாண்டியப் படைகளையும் தோற்கடித்த அவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சவாலாய்த் திகழ்ந்தனர். ஜெருசலேமுக்கு வரும் கிறித்தவ புனிதப் பயணிகள் துருக்கியர்களால் பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனால் ஏற்பட்ட மோதல்களே சிலுவைப் போர்களுக்கு இட்டுச் சென்றன.

### 6.3 (இ) சிலுவைப் போர்களும் செல்ஜுக் துருக்கியரின் வீழ்ச்சியும்

போப்பாண்டவரும் திருச்சபையும் புனித நகரமான ஜெருசலேமைமீட்பதற்காக 'ஜெருசலேமை நோக்கிச் செல்லுங்கள்' என அனைத்துக் கிறித்தவ மக்களுக்கும் அழைப்பு விடுத்தனர். புனிதப்போர் செய்தவர்கள் அப்புனித இடங்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த செல்ஜுக் துருக்கியரோடு போரிட்டனர். கி.பி. (பொ.ஆ.) 1095 இல் கிறித்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே தொடங்கிய இப்போராட்டம் ஏறத்தாழ 200 ஆண்டுகள் தொடர்ந்தன. இவையே சிலுவைப் போர்கள் என அழைக்கப்படுகின்றன.

B37VY2

சிலுவைப் போர்களின் மூலம் கிறித்தவர்களால் நினைத்ததைச் சாதிக்க இயலவில்லை. ஜெருசலேம் தொடர்ந்து 700 ஆண்டுகள் உதுமானிய துருக்கியர் வசமே இருந்தது. இந்த தொடர் சிலுவைப் போர்களால் செல்ஜுக் துருக்கியர்கள் பலவீனமடைந்தனர். இதனிடையே கிழக்கேயிருந்து மங்கோலியர்களின் படையெடுப்பில் சிலுவைப்போர் பிரச்சனைகள் ஓரம் கட்டப்பட்டன. கிறித்தவர்களும் இஸ்லாமியர்களும் செங்கிஸ்கானின் தலைமையில் முன்னேறி வரும் மங்கோலியர் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினர். கி.பி. (பொ.ஆ)1258இல் பாக்தாத் நகரம் மங்கோலியர்களால் கைப்பற்றப்பட்டு அழிவுக்கு உள்ளானது. அப்பாசித்து பேரரசின் எஞ்சியவையும் முடிவிற்கு வந்தன.




ஜெருசலேம்

### 6.3 (ஈ) சிலுவைப் போர்களின் தாக்கம்

சிலுவைப் போர்கள் நிலப்பிரபுத்துவம் சார்ந்த உறவுகளுக்குமுடிவுகட்டியது.சிலுவைப்போரில்பங்கு பெறுவதற்காகக் கிழக்கே சென்று பல பிரபுக்கள் நீண்ட காலத்திற்கு அங்கேயே தங்க நேர்ந்தது. சிலர் திரும்பி வரவேயில்லை. இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி பண்ணை அடிமைகள் பலர் நிலத்தோடு தங்களை கட்டிப் போட்டிருந்த அடிமைக்கட்டுகளை உடைத்து வெளியேறினர். கீழைநாட்டுப் பொருட்களுக்கான தேவைகள் அதிகரித்ததால் வியாபாரம் பெருகியது. மத்திய தரைக்கடல் பகுதியில் வெனிஸ், ஜெனோவா,


IX_Std_History_TM_Unit _6.indd 87 2/10/2020 10:02:44 AM




உதுமானியப் பேரரசு

பைசா ஆகிய நகரங்கள் முக்கிய வணிக மையங்களாகத் தோன்றின. கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையேயான வணிகத்தில் கான்ஸ்டாண்டிநோபிள் நகரம் வகித்துவந்த இடைத்தரகர் பாத்திரம் முடிவுக்கு வந்தது. வலிமைவாய்ந்த நிலப்பிரபுக்கள் அழிந்துபோனது ஒருவகையில் இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் முடியாட்சி வலுப்பெறுவதற்கு காரணமாயிற்று. சிலுவைப் போர்களின் குறிப்பிடத்தகுந்த ஒரு விளைவு போப்பாண்டவரும் அவருடைய ஆட்சிமுறையும் தங்கள் செல்வாக்கையும் மரியாதையையும் இழக்க நேர்ந்ததாகும்.

### மங்கோலியர்கள் மற்றும் செங்கிஸ்கான்

மங்கோலியர்கள் நாடோடிகள். போர்த்திறன் கொண்ட அவர்கள் செங்கிஸ்கான் எனும் மகத்தான தலைவனை உருவாக்கினார்கள். செங்கிஸ்கான் சிறப்பு மிக்க இராணுவ ஆற்றல் கொண்டவர். மங்கோலியர்கள் ரஷ்யாவை 300 ஆண்டுகாலம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இதன் காரணமாக இடைக்காலத்தின் இறுதிவரை ஏனைய ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் தொழில்நுட்பங்களில் ரஷ்யா வளர்ச்சியடையாது பின்தங்கியிருந்தது.



செங்கிஸ்கான்

## 6.4 உதுமானியப் பேரரசு (Ottomon Empire)

ஆசியாவெங்கும் மங்கோலியர் முன்னேறிக் கொண்டிருந்தபோது உதுமானியத் துருக்கியர்கள் (செல்ஜுக் துருக்கியர்களிடமிருந்து வேறுபட்டவர்கள்) தப்பியோடி மேற்கு ஆசியாவில் செல்ஜுக் துருக்கியர்களிடம் அடைக்கலம் அடைந்தனர். செல்ஜுக் துருக்கியர்கள் வலிமை இழந்தபோது உதுமானியத் துருக்கியர்கள் தங்கள் அதிகாரத்தை விரிவுபடுத்தினர். அவர்கள் மேற்கு ஆசியாவைத் தாண்டி ஐரோப்பாவினுள் புகுந்து பல்கேரியா, செர்பியா ஆகிய நாடுகளைக் கைப்பற்றி, அட்ரியாநோப்பிளை தங்களின் தலைநகராக்கினர். கான்ஸ்டாண்டிநோபிளை நேரடியாகத் தாக்குவதைத் தவிர்க்க அவர்கள் அந்நகரை சூழ்ந்து சரியான நேரம் வரும்வரை காத்திருந்தனர். கி.பி. (பொ.ஆ.) –1453இல் இரண்டாம் முகமது கான்ஸ்டாண்டிநோபிளைக் கைப்பற்றினார். இதனால் பால்கன், கருங்கடல், மத்திய கிழக்கு ஆகிய பகுதிகளில் உதுமானியத் துருக்கியர்கள் தங்கள் மேலாதிக்கத்தை நிறுவினர்.

மிக குறுகிய காலம் உதுமானியர்கள் வலிமையாக இருந்தனர். கிறித்தவ ஐரோப்பா அவர்களைக் கண்டு அச்சம் கொண்டது. எகிப்தைக் கைப்பற்றியபின் உதுமானியர்கள் 'கலீஃபா' பட்டத்தைச் சூடிக் கொண்டார்கள். அக்காலப் பன்னாட்டு அரசியலில் அவர்கள் முக்கியப் பங்கு வகித்தனர். 19ஆம் நூற்றாண்டில் வலிமைகுன்றிக் காணப்பட்ட அவர்களின் அரசு, முதல் உலகப்போரின் இறுதியில் முடிவிற்கு வந்தது.




IX_Std_History_TM_Unit _6.indd 88 2/10/2020 10:02:45 AM

## 6.5 நிலப்பிரபுத்துவம்

### 6.5 (அ) அரசு

வலுவான மதங்களான கிறித்தவமும் இஸ்லாமும் மக்களின் மீது பெரும் செல்வாக்கைச் செலுத்தினாலும், மக்களுடைய பொருளாதார வாழ்க்கை நிலப்பிரபுத்துவ உறவுகளால் தீர்மானிக்கப்பட்டது.



நிலப்பிரபுத்துவம்

இப்பூமியில் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்படும் அரசர் நிலப்பிரபுத்துவத்தின் தலைவராகக் கருதப்பட்டார். அவர்களுக்கு அடுத்த நிலையில் கோமகன்களாகக் கருதப்பட்ட டியூக்குகள் (Dukes) 'கவுண்ட்'டுகள் (Counts) 'யேல்'கள் (Earls) போன்றோர் இருந்தனர். இந்த நிலப்பிரபுக்கள், நிலப்பிரபுத்துவ அடிப்படையில் அரசரிடம் இருந்து நிலம் பெற்றுக் கொண்டு அவருக்காக போரிட சம்மதித்த வகுப்பினர் ஆவர். அரசர் நிலங்களைப் பிரித்து இவர்களுக்குக் கொடுத்தார். இவர்கள் தாங்கள் பெற்ற நிலங்களை பிப் (Fief) துண்டுகளாகப் பிரித்தனர். தங்களுக்குக் கீழிருந்த வைஸ் கவுண்ட் என்பவர்களுக்கு விநியோகம் செய்தனர். இவ்வரிசையில் இறுதி இடம் பெற்றவர்கள் நைட் (knight) எனப்படும் சிறப்புப்பணி வீரர்கள். இவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தை வேறு எவருக்கும் பிரித்துத்தர முடியாது. இவர்கள் அனைவருக்கும் கீழ் அடிமட்டத்தில் இருந்தவர்கள் வில்லொயன் அல்லது செர்ப் (villein or serf) என்றறியப்பட்ட பண்ணை அடிமைகள் ஆவர்.

> ∴பிப் (fief) என்பது ஒருவருக்கு அவரைவிட மேல் நிலையில் இருக்கும் கோமகனால் வழங்கப்படும் நிலம். நிலத்தைப் பெற்றவர் நிலம் கொடுத்தவருக்கு கைமாறாக சில சேவைகளைச் செய்ய வேண்டும். அது அவருடைய கடமையாகும்.

அண்டியிருத்தலை மையமாகக் கொண்ட நிலப்பிரபுத்துவ முறையில் சமத்துவம், சுதந்திரம் ஆகிய கருத்துக்களுக்கு இடமில்லை. உரிமைகளும், கடமைகளும் மட்டுமே இருந்தன. பிஷப்புகள் (Bishop–மாவட்ட அளவிலான மதத்தலைவர்) 'அபாட்'டுகள் (Abbot–கிறித்தவ மதகுருக்களின் தலைவர்) 'கார்டினல்கள்' (Cardinal–போப்பாண்டவருக்கு அடுத்த நிலையிலுள்ள மதகுரு) ஆகியோரும் திருச்சபையும் சமூக அரசியல் கட்டமைப்பின் கீழ் இடம் பெற்றனர். பிரபுக்களும் மதகுருமார்களும் உடல் உழைப்பில் ஈடுபடமாட்டார்கள். எனவே அவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உணவு மற்றும் இதர அவசியத் தேவைகள் அனைத்தையும் உற்பத்தி செய்துதர வேண்டிய பொறுப்பை விவசாயிகள் சுமக்க நேர்ந்தது.

### 6.5 (ஆ) திருச்சபை

கிறித்தவ இறையியலில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. அவை சமயகுருமார் கோட்பாடு மற்றும் புனிதச் சடங்குகள் பற்றியனவாகும். இவ்விரு அம்சங்களும் சமயகுருமார்களின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்தன.

இடைக்காலத்தின் இறுதியில் திருச்சபையின் வளர்ச்சியோடு பேராசை மிக்க அரசியல் தலைவர்களின் எழுச்சியும் ஏற்பட்டது. ஜெர்மன் நாட்டு பேரரசர் நான்காம் ஹென்றிக்கும், போப்பாண்டவர் ஏழாம் கிரிகோரிக்கும் ஏற்பட்ட மோதலில் போப் மதவிலக்கம் என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி பேரரசரைப் பதவி விலகச் செய்தார். இதை பயன்படுத்தி போப் மூன்றாம் இன்னோசன்ட் இங்கிலாந்தும், அயர்லாந்தும் திருச்சபைக்குச் சொந்தமானவை என அரசர் ஜானை அங்கீகரிக்க வைத்தார். பல கிறித்தவ சமயப் பற்றாளர்கள், போப்பாண்டவர் அரசு அதிகாரத்தில் தலையிடுவதை வெறுக்கத் தொடங்கினர்.

> **திருச்சபை விலக்கம்** என்பது ஒரு மனிதன் கிறித்தவனாக இருப்பதால் என்ன உரிமைகளுக்குத் தகுதியானவரோ அவ்வுரிமைகள் அவருக்கு மறுக்கப்படுவதாகும். அவர் திருச்சபைக்குள் புனிதச் சடங்குகளைச் செய்ய முடியாது. இறந்த பின்னர் அவருடைய உடலைத் திருச்சபைக்குச் சொந்தமான கல்லறைத் தோட்டத்தில் புதைக்க முடியாது. மதவிலக்கம் என்பது ஒரு அரசனுடைய குடிமகனுக்கு அவர் பெறத் தகுதியுள்ள சமயம் சார்ந்த பயன்களை மறுப்பதன் மூலம் அந்நபரை அரசனுக்கு எதிராக வெறுப்பு கொள்ளத் தூண்டுவது.



IX_Std_History_TM_Unit _6.indd 89 2/10/2020 10:02:45 AM

# இதே காலகட்டத்தில் இந்தியா.....

### ஹூன்

ரோமானியப் பேரரசின் சரிவுக்கு பிறகு, ஐரோப்பா சிறிய சிறிய ஜெர்மானிய அரசுகளாக சிதறுற்றிருந்த சமயம், ஹூன் இனத்தவர்களும் கடுமையான போர்குணமுள்ள மத்திய ஆசிய மக்களும் வடகிழக்கு இந்தியா மீது படையெடுத்தனர். ஸ்கந்தகுப்தரால் அவர்கள் முறியடிக்கப்பட்டாலும், அவருடைய மறைவிற்கு பின், இந்தியாவினுள் நுழைந்து, மத்திய இந்தியா முழுதும் குடியேறினர். தோரமானர் மற்றும் மிஹிரகுலர் இருவரும் நன்கு அறியப்பட்ட ஹூன் அரசர்கள் ஆவர்கள். இவ்வரசர்கள் புத்த மதத்தவர்களை தண்டித்தனர். புத்த மடாலயங்களை எரித்தனர். ஏறத்தாழ கி.பி (பொ.ஆ) 528 ஆம் ஆண்டு மாளவத்தைச் சார்ந்த யசோதர்மன் மூலமாக ஹூன் இனத்தவர்களது ஆட்சி இந்தியாவில் முடிவுக்கு வந்தது.



ஸ்கந்தகுப்தரின் தங்க நாணயம்



ஸ்கந்தகுப்தரின் வெள்ளி நாணயம்



யசோதர்மனின் வெற்றி தூண், மாண்டசூர்

### பாரசீகத்துடனான சாளுக்கியர்களின் (பாதாமி மற்றும் வாதாபியை உட்கொண்ட) உறவுமுறை

**சாளுக்கியா (Chalukya)**



பாரசீகத்தில் அமையப் பெற்ற சசாநித் வம்சமும் சாளுக்கிய அரசும் சமகால அரசுகளாகும். சீன வம்சத்தில் டாங் என்ற அரசருடன், சசாநித் வம்சத்தின் கடைசி அரசரான இரண்டாம் குசரவ் நல்ல உறவு முறையைக் கொண்டிருந்தார். மேலும் சாளுக்கிய அரசர் இரண்டாம் புலிகேசியின் தூதுவர்களையும் பகிர்ந்து கொண்டார். மாகாராஷ்டிரத்தை உள்ளடக்கிய சாளுக்கிய அரசின் தலைநகர் பாதாமியாகும். **யுவான் சுவாங்** சாளுக்கியர்களின் வீரத்தைப் புகழ்ந்து கூறும்பொழுது "அவர்கள் நன்றி உணர்வு மிக்கவர்களாகவும், போரில் ஈடுபடுவதை பெருமையாகவும், குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்குபவர்களாகவும் திகழ்ந்தார்கள்" என்கிறார்.

### மீள்பார்வை

- கிறித்தவ சகாப்தத்தின்போது ரோமுக்குப் போட்டியாக விளங்கிய சீனா அரசியல் உறுதியற்ற தன்மைக்கு உள்ளாகிப் பின்னர் ஒன்றுபட்டு சுங் அரச வம்சத்தால் மூன்று நூற்றாண்டுகள் ஆளப்பட்டது.
- சுங் அரச வம்சத்தைத் தூக்கி எறிந்த மங்கோலியர்கள் சீனாவில் யுவான் அரச வம்சத்தை நிறுவினர்.
- தனிமைப்பட்டுக் கிடந்த ஜப்பான் கி.பி. (பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டில் மிக்காடோ பேரரசு ஆனபோது மைய நீரோட்டத்தில் இணைந்தது. வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஜப்பான் சீனாவைப் பின்பற்றியது.
- பேரரசர்கள் தங்கள் கட்டுப்பாட்டினைப் படிப்படியாக இழந்தபோது இராணுவத்தளபதி அரசை தன்வசப்படுத்திச் கொண்டார். இவர் காமகூரா சோகுனேட்டை நிறுவினார்.
- காமகூரா சோகுனேட்டுக்குப் பின்னர் அஷிகாகா சோகுனேட் ஆட்சியைக் கைப்பற்றியது.
- நபிகள் நாயகத்தால் நிறுவப்பட்ட இஸ்லாம் மதம் வெகுவாகப் பரவத் தொடங்கியது.
- தொடக்கத்திலேயே இஸ்லாமைத் தழுவிக் கொண்ட அராபியர்கள் முதலாவதாக ஸ்பெயினிலும் பின்னர் ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளிலும் இஸ்லாமிய அரசை நிறுவுவதில் வெற்றி பெற்றனர்.
- முகமதுவின் குடும்ப வழிவந்த கலீஃபாக்கள் உமையதுகள் எனவும் முகமதுவின் மாமன் குடும்பவழி சார்ந்த கலீஃபாக்கள் அப்பாசித்துகள் எனவும் அறியப்பட்டனர். உமையதுகள் டமாஸ்கஸ்ஸிலிருந்து ஆட்சி புரிய அப்பாசித்துகள் பாக்தாத்திலிருந்து ஆண்டனர்.
- நபிகள் நாயகத்தின் மறைவுக்குப் பின்னர் அராபியாவின் தலைமைக்காக நடந்த சண்டை இஸ்லாம் சன்னி, ஷியா என இரண்டாகப் பிரிவதற்கு இட்டுச் சென்றது.



IX_Std_History_TM_Unit _6.indd 90 2/10/2020 10:02:46 AM

- அராபியர் வளர்த்தெடுத்த கட்டடக்கலை சாரசனிக் என அழைக்கப்பட்டது.
- புனித நகரமான ஜெருசலேமை செல்ஜுக் துருக்கியர்கள் கைப்பற்றிக் கொண்டது சிலுவைப் போர்களுக்குக் காரணமானது.
- செல்ஜுக் துருக்கியர்கள் வலிமை குன்றியது, ஆட்டோமன் துருக்கியரின் எழுச்சிக்கு இட்டுச் சென்றது.
- கான்ஸ்டாண்டிநோபிளைத் துருக்கியர் கைப்பற்றியது இடைக்காலத்தை முடித்து வைத்தது.
- இடைக்காலத்தில் மக்களின் அன்றாட வாழ்வு நிலப்பிரபுத்துவ முறை சார்ந்ததாக இருந்தது.
- சமயம் சார்ந்த விஷயங்களில் மட்டும் அதிகாரம் செலுத்தி வந்த திருச்சபை மெல்ல மெல்ல சமயம் சாராத விஷயங்களிலும் தனது அதிகாரத்தை நிலைநாட்டத் தொடங்கியது.

## பயிற்சிகள்

B3GRZP

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

1. ____________ ஜப்பானின் பூர்வீக மதம் ஆகும்.

   அ) ஷின்டோ ஆ) கன்பியூசியானிசம்

   இ) தாவோயிசம் ஈ) அனிமிசம்

2. ____________ என்பதன் பொருள் பெரும் பெயர் என்பதாகும்.

   அ) டய்ம்யாஸ் ஆ) சோகன்

   இ) பியுஜிவாரா ஈ) தொகுகவா

3. ஸ்பெயினைக் கைப்பற்றிய அராபிய தளபதி ____________.

   அ) தாரிக்

   ஆ) அலாரிக்

   இ) சலாடின்

   ஈ) முகமது என்னும் வெற்றியாளர்

4. ஹரூன்–அல் ரஷித் என்பவர் ____________ ன் திறமையான அரசர்.

   அ) அப்பாசித்து வம்சம் ஆ) உமையது வம்சம்

   இ) சசானிய வம்சம ஈ) மங்கோலிய வம்சம்

5. நிலப்பிரபுத்துவம் ____________ மையமாகக் கொண்டது.

   அ) அண்டியிருத்தலை ஆ) அடிமைத்தனத்தை

   இ) வேளாண் கொத்தடிமையை ஈ) நிலத்தை

### II. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. ____________ என்பவர்கள் ஜப்பானின் பூர்வ குடிகள் ஆவர்.
2. ____________ என்பது ஜப்பானின் முந்தையப் பெயர் ஆகும்.
3. ____________ என்பது மெதினாவின் முந்தையப் பெயர் ஆகும்.
4. வடக்குப் பகுதியில் இருந்த சீனர்களுக்கு பண்பாட்டில் பின் தங்கிய ____________ மக்கள் அச்சுறுத்தலைக் கொடுத்தனர்.
5. உதுமானியர் மேலாண்மையை பால்கன் பகுதியில் நிறுவியவர் ____________ ஆவார்.

### III. சரியான கூற்றைத் தேர்ந்தெடு

1. (i) செங்கிஸ்கான் ஒரு மத சகிப்புத்தன்மை இல்லாதவர்.

   (ii) மங்கோலியர் ஜெருசலேமை அழித்தனர்.

   (iii) உதுமானியப் பேரரசை, சிலுவைப் போர்கள் வலுவிழக்கச் செய்தன.

   (iv) போப்பாண்டவர் கிரிகோரி, நான்காம் ஹென்றியை, மதவிலக்கம் என்னும் ஆயுதத்தைப் பயன்படுத்தி, பதவி விலகச் செய்தார்.

   அ) (i) சரி ஆ) (ii) சரி

   இ) (ii) மற்றும் (iii) சரியானவை ஈ) (iv) சரி

2. (i) மங்குகான் என்பவர் சீனாவின் ஆளுநர்

   (ii) சீனாவில் இருந்த மங்கோலிய அரச சபை மார்க்கோபோலோவின் நன்மதிப்பைப் பெற்றது.

   (iii) 'சிகப்புத் தலைப்பாகை' என்ற அமைப்பின் தலைவராக இருந்தவர் ஹங் சாவோ.

   (iv) மங்கோலியர்கள் சீனாவில் தங்களது ஆட்சியை யுவான் வம்சம் என்ற பெயரில் நிறுவினர்.

   அ) (i) சரி ஆ) (ii) சரி

   இ) (ii) மற்றும் (iv) சரியானவை ஈ) (iv) சரி

3. (i) போயங் மற்றும் சங்–ஆன் ஆகியவை சுங் வம்சத்தால் கட்டப்பட்டது.

   (ii) விவசாயிகளின் எழுச்சி, சாங் வம்சம் அழிய வழிகோலியது.

   (iii) செல்ஜுக் துருக்கியர் என்பவர் தார்த்தாரியர் என்னும் பழங்குடியினர் ஆவர்.

   (iv) மங்கோலியர்கள், ஜப்பானில் தங்களது ஆட்சியை யுவான் வம்சம் என்ற பெயரில் நிறுவினர்.

   அ) (i) சரி ஆ) (ii) சரி இ) (iii) சரி ஈ) (iv) சரி



IX_Std_History_TM_Unit _6.indd 91 2/10/2020 10:02:46 AM

4. **கூற்று (கூ):** பௌத்த மதம் இந்தியாவில் இருந்து சீனாவிற்குச் சென்றது.

**காரணம் (கா):** சீனாவில் தொடக்காலத்தில் குடியேறிய இந்தியர்கள் பௌத்த மதத்தை பின்பற்றியவர்கள்.

அ) கூற்று சரி ; காரணம் தவறு

ஆ) கூற்றும் காரணமும் தவறு

இ) கூற்றும் காரணமும் சரியானவை

ஈ) கூற்று தவறு ; காரணம் கூற்றுக்கு தொடர்பற்றது

5. **கூற்று (கூ).** ஜெருசலேமை துருக்கியர் கைப்பற்றிக் கொண்டது சிலுவைப் போருக்குக் காரணமானது.

**காரணம் (கா).** ஜெருசலேமிற்கு புனிதப் பயணம் மேற்கொள்ள ஐரோப்பிய கிறித்தவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

அ) கூற்று சரி ; காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.

ஆ) கூற்றும் காரணமும் சரி

இ) கூற்றும் காரணமும் தவறு

ஈ) கூற்று சரி ; காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம்.

## IV. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. | சிகப்பு தலைப்பாகைகள் | - | காமகுரா |
| 2. | செல்ஜுக் துருக்கியர்கள் | - | இரண்டாம் முகமது |
| 3. | முதல் சோகுனேட் | - | அரேபிய இரவுகளின் நகரம் |
| 4. | பாக்தாத் | - | சூ யுவான் சங் |
| 5. | கான்ஸ்டாண்டிநோபிள் கைப்பற்றப்படல் | - | மத்திய ஆசியா |

## V. சுருக்கமான விடையளி

1. சீனப் பெருஞ்சுவர்.
2. சிலுவைப் போர்களின் தாக்கம்.
3. இடைக்காலத்தில் நிலப்பிரபுத்துவம் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது?
4. இடைக்காலத்தில், சமயகுருமார்கள் தங்கள்அதிகாரத்தை வலியுறுத்தப் பயன்படுத்திய இரண்டு கருவிகள் யாவை?

## VI. விரிவான விடையளி

1. சோகுனேட்களின் கீழ் ஜப்பானின் எழுச்சி பற்றி விரிவாகக் கூறுக.
2. மங்கோலியர்கள் என்பவர் யார்? அவர்கள் சீனாவை எவ்வாறு ஆட்சி செய்தனர்?

## வரலாற்றுடன் வலம் வருக

### மாணவர் செயல்பாடுகள்

1. உலக வரைபடத்தில் வரலாற்றுக்கு முந்தைய கால நாகரிகம் நிலவிய பகுதிகளைக் குறிக்கவும்.
2. வரலாற்றுக்கு முந்தைய காலம் தமிழ்நாட்டில் நிலவிய இடங்கள் என்ற தலைப்பில் ஒரு கண்காட்சியை அமைக்கவும்.

### ஆசிரியரின் வழிகாட்டுதலுடன் செய்ய வேண்டியவை

1. உதுமானியரின் குடும்ப வழித்தோன்றல்களை அட்டவணைப்படுத்தவும். எகிப்தின் சலாதீன், உதுமானியப் பேரரசின் உன்னத சுலைமான் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய குறிப்புகளை எழுதவும்.
2. சிங்க இதயம் கொண்ட இங்கிலாந்தின் ரிச்சர்ட் மற்றும் ஜெர்மானியப் பேரரசர் பிரடரிக் பார்பரோசா மேற்கொண்ட சிலுவைப் போர்கள் குறித்து எழுதுக.

## மேற்கோள் நூல்கள்


1. வ. இராசாராம் – *சீனா, ஜப்பான் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் வரலாறு (கிபி.1066 வரை)* த.பா.ம.க.ப. கழகம், சென்னை–6 (ஆவணப்பதிப்பு – ஆகஸ்ட் 2017).
2. அ. உஸ்மான் ஷெரீப் – *உத்மானிய துருக்கியர்களின் வரலாறு,* த.பா.ம.க.ப. கழகம், சென்னை–6 (ஆவணப்பதிப்பு – ஆகஸ்ட் 2017).
3. தி.வை. சொக்கப்பா – *அரபு மக்களின் வரலாறு,* த.பா.ம.க.ப. கழகம், சென்னை–6 (ஆவணப்பதிப்பு – ஆகஸ்ட் 2017).
4. Jawaharlal Nehru, *Glimpses of World History*, Penguin.
5. Chris Harman, *People's History of the World*, Verso, 1999
6. Philip Ralph and Edward McNail Burns, *The World Civilizations: From the Stone Age to the New Millennium*, Library of Congress, 1968.
7. Richard Overy(ed.), *Complete History of the World*, Harper Collins, 2007
8. Paul Kennedy, *Rise and Fall of the Great Powers: Economic Change and Military Conflict*, Harper Collins, 2007.




IX_Std_History_TM_Unit _6.indd 92 2/10/2020 10:02:46 AM